## வண்ணாரப்பேட்டை-விம்கோநகர்

# புதிய மெட்ரோ ரெயிலில் 10 ஆயிரம் பேர் பயணம்

சென்னை, பிப். 16–

வண்ணாரப்பேட்டை–விம்கோநகர் இடையே மெட்ரோ ரெயில் சேவை நேற்று முன்தினம் தொடங்கியது. முதல் நாளில் இலவச பயணத்திற்கு அனுமதி அளிக்கப்பட்டது.

இதனால் அதிகபட்சமாக 1 லட்சத்து 40 ஆயிரம் பேர் அன்று பயணம் செய்தனர். மெட்ரோ ரெயில் முதல் கட்ட திட்டம் முழுமை அடைந்ததை தொடர்ந்து பயணிகள் எண்ணிக்கை உயரும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

இந்த நிலையில் புதிதாக சேவை தொடங்கி உள்ள வண்ணாரப்பேட்டை–விம்கோநகர் வழித்தடத்தில் நேற்று மட்டும் 9,972 பேர் பயணம் செய்து உள்ளனர். இந்த வழித்தடத்தில் 7 ரெயில் நிலையங்கள் உள்ளன. இதில் விம்கோநகரில் அதிகபட்சமாக 1,727 பேர் பயணம் செய்துள்ளனர்.

மற்ற ரெயில் நிலையங்களில் பயணித்தவர்கள் விவரம் வருமாறு:–

திருவொற்றியூர்–1544
காலடிப்பேட்டை–1645
சுங்கசாவடி–1276
புதுவண்ணாரப்பேட்டை–1466
தண்டையார்பேட்டை– 854
தியாகராய கல்லூரி– 1460

### பயணிகள் அதிகரிப்பு

மேலும் கொரோனா தொற்றுக்கு பிறகு இரண்டு வழித்தடத்திலும் சேர்த்து நேற்று அதிகபட்சமாக 80 ஆயிரத்து 152 பேர் பயணம் செய்து உள்ளனர்.

சென்ட்ரலில் 7,562 பேர், விமான நிலையம் 4,791, வண்ணாரப்பேட்டை 2,578, ஐகோர்ட்டு 3,806, அரசினர் தோட்டம் 2,620, ஆயிரம் விளக்கு 2,647, திருமங்கலம் 4,320, கோயம்பேடு 3,339, புறநகர் பஸ் நிலையம் 2,980, வடபழனி 2,514, ஆலந்தூர்3,249, அசோக்நகர் 1,878 உள்ளிட்ட ரெயில் நிலையங்களில் பயணிகள் எண்ணிக்கை படிப்படியாக உயர்ந்து வருகிறது.